# பா.ஜ.க.வின் கண்ணாடிக் கோட்டையை உடைக்கும் தீர்ப்பு!

ஆளுநர் ஆர்.என்.ரவியின் சட்டமீறல்களை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடுத்த வழக்கில், உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு, பல முக்கியமான நெத்தியடிகளைக் கொடுத்துள்ளது. எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களை கொண்டு மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வரும் நிலையில், அதன் கொட்டத்தை அடக்கும் வகையிலான தீர்ப்பை பெற்று, ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் மொத்த நாட்டுக்கும் வழி காட்டியிருக்கிறது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு. 414 பக்கங்களை கொண்டிருக்கும் தீர்ப்பு, கூட்டாட்சியை வலுப்படுத்தும் தி.மு.க.வின் வரலாற்றில் முக்கியப் பங்கை இனி வரும் காலங்களில் நிச்சயம் வகிக்கும்.

தீர்ப்பின் முக்கியமான கருத்துக்கள் இவை தான்:

**1. இனி காலம் தாழ்த்த முடியாது:**

அரசமைப்புச் சட்டத்தில் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கென 'as soon as possible' என்பதற்கான கால வரையறையை நிர்ணயித்திருக்கிறது உச்ச நீதிமன்றம். மாநில அரசின் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதா இல்லையா என தீர்மானிப்பதற்கு என குடியரசு தலைவருக்கு மூன்று மாத கால வரையறையை நிர்ணயித்திருக்கிறது உச்சநீதிமன்றம். இந்த கால வரையறை என்பது மசோதாக்களை குடியரசு தலைவருக்கு ஆளுநர் அனுப்பிய நாளிலிருந்து தொடங்கும்.

**2. உச்சநீதிமன்றத்துக்கு பொறுப்பு:**

மசோதாக்களை முடக்கும் வகையில் ஆளுநரோ குடியரசுத் தலைவரோ காலம் தாழ்த்துவதை தடுக்கும் பொருட்டு, தேவைப்பட்டால் உச்சநீதிமன்றமும் தலையிடும் என தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆளுநர் ஒரு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த பிறகு, குடியரசு தலைவர் அந்த மசோதா குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கிடப்பில் போட்டால், மாநில அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தை நாடலாம். இரு தரப்பிலிருந்தும் பதில் ஏதும் கிடைக்காத பட்சத்தில் உச்ச நீதிமன்றத்தில் முறையிட எல்லா நியாயங்களும் மாநில அரசுக்கு இருக்கிறது.

**3. குடியரசு தலைவருக்கும் வரையறை:**

ஆளுநரை போல குடியரசுத் தலைவரும் மாநில அரசின் செயல்பாட்டை குலைக்கும் வகையில் காலம் தாழ்த்தக் கூடாது என உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருக்கிறது. உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது ஒப்புதல் அளிக்காமல் இருப்பதற்கான காரணங்களை வெளிப்படுத்த வேண்டுமென குடியரசு தலைவரின் பொறுப்பை விவரித்திருக்கும் உச்சநீதிமன்றம், இத்தகைய மசோதாக்களை ஆலோசிக்கும் போது, அவற்றின் சட்டத்தன்மை குறித்து சந்தேகம் இருந்தால் குடியரசு தலைவர், உச்சநீதிமன்றத்திடம் அறிவுரை கேட்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. அதே நேரத்தில் மாநில அரசுகளின் அதிகாரத்தை பறிப்பதற்காக இந்த நடைமுறையையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்றும் அது எச்சரித்திருக்கிறது.

**4. ஆளுநருக்கு அறிவுறுத்தல்:**

ஆர்.என்.ரவி தொடர்ந்து தமிழ்நாடு அரசின் செயல்பாட்டுக்கு இடையூறு விளைவித்து வரும் நிலையில், அவரது போக்கை உச்சநீதிமன்றம் கடுமையாக விமர்சித்திருக்கிறது. ஆளுநர் பொறுப்பில் இருப்பவர்கள், அரசியல் சாசனத்தை பின்பற்றித்தான் முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் குறுகிய கால அரசியல் ஆதாயங்களை கருதி, முடிவுகள் எடுக்கக் கூடாது என்றும் உச்சநீதிமன்றம் விமர்சித்திருக்கிறது. மேலும் தீர்ப்பில், மாநில அரசின் மசோதாவை தனிப்பட்ட அதிருப்தியாலோ, அரசியல் ஆதாயம் கருதியோ பிற காரணங்களுக்காகவோ குடியரசு தலைவருக்கு அனுப்பி வைக்க அரசியல் சாசனத்தில் அனுமதி கிடையாது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**5. ஆளுநரின் தவறு:**

தமிழ்நாடு சட்டசபை இரண்டாம் முறை ஆளுநருக்கு மசோதாக்களை அனுப்பிய பிறகு, அவற்றை அவர், குடியரசுத் தலைவருக்கு சட்டப்படி அனுப்பியிருக்கக் கூடாது என தீர்ப்பு குறிப்பிடுகிறது. எனவே அவற்றின் மீது குடியரசு தலைவர் என்ன முடிவு எடுத்திருந்தாலும் அது சட்டப்படி செல்லாது எனக் குறிப்பிட்டு, கடுமை காட்டியிருக்கிறது உச்சநீதிமன்றம்.

**6. மாநில அரசுக்கே அதிகாரம்:**

ஆளுநர் உள்ளிட்ட எந்த அரசியல் சாசனப் பொறுப்புகளுக்கும் மாநில அரசின் மசோதாவை முழுமையாக நிராகரிக்கும் 'Absolute Veto' அதிகாரம் கிடையாது எனக் குறிப்பிடும் உச்சநீதிமன்றம், இது குடியரசு தலைவருக்கும் பொருந்தும் என்றும் அதிகார வரம்புகளை தெளிவுபடுத்தி இருக்கிறது. ஒரு வேளை சட்டத்துக்கு புறம்பாக மசோதா இருப்பதாக கருதினாலும், அதற்கான முடிவெடுக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்குத் தான் உண்டு என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**7. ஆளுநரின் மக்கள் விரோத நடவடிக்கை:**

சட்டசபையின் அதிகாரத்துக்கு இத்தீர்ப்பு முக்கியத்துவம் அளித்திருக்கிறது. 'மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கடமை உண்டு. மக்களின் நலன் கருதி சட்டசபை கொண்டு வரும் மசோதாக்கள், சட்டங்கள் ஆகவில்லை எனில், மக்கள் பிரதிநிதிகள் மக்களின் எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருக்கும். எனவே மசோதாக்கள் கிடப்பில் போடப்படுவது என்பது மக்கள் ஆட்சிக்கு எதிராக மாறும் சாத்தியம் கொண்டது,' எனக் குறிப்பிடும் தீர்ப்பு, 'மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், வேண்டுமென்றே ஆளுநர் காலம் தாழ்த்திக் கொண்டிருந்தால், அதை நாட்டின் கூட்டாட்சிக்கு எதிரான செயல்பாடாகதான் கருத வேண்டும்' என்றும் அழுத்தந்திருத்தமாக விளக்கியிருக்கிறது.

**அமரகீதன்**

**8. ஆளுநருக்கு கண்டனம்:**

ஆளுநர் ஆர்.என்.ரவியை கடுமையாக கண்டித்திருக்கிறது உச்சநீதிமன்றம். 'ஆளுநர் பொறுப்பு தொடர்பாக வெளியான உச்சநீதிமன்ற தீர்ப்புகள் எதையும் தமிழ்நாடு ஆளுநர் மதிக்கவே இல்லை. இந்த மசோதாக்கள் மீது அவர் நடவடிக்கை எடுப்பார் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவேதான் சட்டப்பிரிவு 142 உச்சநீதிமன்றத்துக்கு அளித்திருக்கும் அதிகாரத்தைக் கொண்டு 10 மசோதாக்களுக்கும் நாங்களே ஒப்புதல் அளிக்கிறோம்,' என உச்சநீதிமன்றம் கடுமையான முடிவை எடுத்துள்ளது.

நீதியரசர் மகாதேவன்

நீதியரசர் பர்திவாலா

**9. அரசியல் சாசனத்துக்கே விரோதமாக செயல்படும் ஆர்.என்.ரவி.**

ஆளுநர் பொறுப்பின் முக்கியத்துவம் மற்றும் தன்மை ஆகியவற்றை தீர்ப்பில் உச்சநீதிமன்றம் விவரித்திருக்கிறது. 'பதவிப்பிரமாணத்தின்போது, 'அரசியல் சாசனத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் காத்து, மாநில மக்களின் நலனுக்காக உழைப்பேன்' என்றுதான் ஆளுநர் உறுதிமொழி எடுப்பார். எனவே அரசியல் சாசனப்படி தான் அவர் நடக்க வேண்டும். மக்களின் நலனுக்காக உழைப்பதாக அவரை உறுதிமொழி எடுக்க செய்வதற்கும் காரணம் இருக்கிறது. மாநிலத்தை மக்களின் நலன் கருதி தான் அவர் செயல்பட வேண்டும். மாநில அரசுடன் இயைந்துதான் அவர் செயல்பட வேண்டும். இல்லையெனில், அவர் எடுத்த உறுதிமொழிக்கே புறம்பாக செயல்பட்டதாகி விடும்.' என்கிறது இந்த தீர்ப்பு.

**10. ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு குட்டு:**

இறுதியாக அரசியல் சாசனத்தை பற்றி விவரிக்கையில், 'எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகியும் இன்னும் இதே அரசியல் சாசனத்தை நாம் பயன்படுத்துவதற்கு காரணம், அதுதான் நமக்கான உரிமைகளை உறுதிப்படுத்துகிறது. நமக்கான பொறுப்புகளை வரையறுக்கிறது,' என தீர்ப்பில் குறிப்பிட்டு, அரசியல் சாசனத்தை மாற்ற முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டத்துக்கும் மறைமுகமான விமர்சனத்தை வைத்திருக்கிறது உச்சநீதிமன்றம். இன்னும் ஒரு படி மேலே சென்று, அரசியல் சாசனத்தை இயற்றிய டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின், "நல்ல அரசியல் சாசனமாக இருந்தாலும், அதை செயல்படுத்துபவர்கள் மோசமானவர்களாக இருந்தால், அரசியல் சாசனமும் மோசமாகி விடும்," என்ற கூற்றை மேற்கோள் காட்டியிருகிறது தீர்ப்பு. இதுதான் பாஜக அரசுக்கு வைத்த கொட்டு ஆகும்.

**11. இது இறுதி எச்சரிக்கை:**

"நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுக்கும் மதிப்பளிக்கும் வகையில் ஆளுநர்கள் செயல்பட வேண்டும்" என்ற இறுதி எச்சரிக்கையை இத்தீர்ப்பு செய்துள்ளது. ஆளுநர்கள் மூலமாக இரட்டை யாட்சி நடத்தத் துடிக்கும் ஒன்றிய பாஜக அரசுக்கு 'செக்' வைக்கப்பட்டுள்ளது.

மேலும்மேலும் அதிகாரத்தை தன்னகத்தே குவித்துக் கொண்டு எதேச்சதிகாரத்தை நோக்கி விரைய முயற்சித்துக் கொண்டிருக்கும் பா.ஜ.க.வின் ஆதிக்க ஆட்சிக்கு எதிராக ஜனநாயப்பூர்வமான கூட்டாட்சிக்கான போராட்டத்தில் முக்கியமான மைல்கல்லை இத்தீர்ப்பு மூலம் தமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது.

பா.ஜ.க.வை வீழ்த்துவதற்கான போரில் மற்றுமொரு ஆயுதத்தை உருவாக்கி அளித்திருக்கிறது தி.மு.க. கண்ணாடிக் கோட்டையாக பா.ஜ.க. கட்டி எழுப்பிக் கொண்டிருக்கும் பாசிசத்தின் மீது இன்னொரு பாறாங்கல்லை உருட்டி விட்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில்

# சமத்துவ நாளையொட்டி 49,542 பயனாளிகளுக்கு நல உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஏப். 15-**

**அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான (ஏப்ரல் 14) சமத்துவ நாளையொட்டி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மொத்தம் 49,542 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.332.60 கோடி மதிப்பிலான கட்டடங்களை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.4.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவ நாள் விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 227 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களுக்காக 18 விடுதிக் கட்டடங்கள், 46 பள்ளிக் கட்டடங்களுக்கு உட்கட்டமைப்பு வசதி, 19 சமுதாய நலக்கூடங்கள், 22 கல்லூரி விடுதிகளில் கற்றல் கற்பித்தல் கூடம் மற்றும் 1000 பழங்குடியினர் குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில் நீண்ட தூர கம்பியில்லா இணைப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் 104 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 48,436 பயனாளிகளுக்கு வழங்கினார்.

**திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடங்களின் விவரங்கள்**

சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய விடுதிக் கட்டடம், செங்கல்பட்டு மாவட்டம் - செய்யூர், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டம் - திருப்பூர் மற்றும் தாராபுரம், அரியலூர் மாவட்டம் - மீன்சுருட்டி, கரூர் மாவட்டம் - குளித்தலை, திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி, மயிலாடுதுறை மாவட்டம் - திருவெண்காடு, திண்டுக்கல் மாவட்டம் - நிலக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடி, தேனி மாவட்டம் - சின்னமன்னூர் ஆகிய இடங்களில் 83 கோடியே 77 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கான 14 விடுதிக் கட்டடங்கள், செங்கல்பட்டு மாவட்டம் - குமிழி, வேலூர் மாவட்டம் - பீஞ்சமந்தை, கள்ளக்குறிச்சி மாவட்டம் - கொட்டப்புதூர் மற்றும் சங்கராபுரம் ஆகிய இடங்களில் 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கான 4 விடுதிக் கட்டடங்கள், என மொத்தம் 98 கோடியே 37 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18 விடுதிக் கட்டடங்கள்;

செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 49 கோடியே 14 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளிக் கட்டடங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் - ஆட்சிவிளாகம், கிருஷ்ணகிரி மாவட்டம் - குப்பநத்தம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - வடக்கனந்தல், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துறையூர் விநாயகர் தெரு, முத்தையம்பாளையம், தஞ்சாவூர் மாவட்டம் - புனல்வாசல் கிழக்கு, வடபாதிமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம் - கருமல், திண்டுக்கல் மாவட்டம் - ஜி. நடுபட்டி, தூத்துக்குடி மாவட்டம் - சின்ன காலனி, தென்காசி மாவட்டம் - அழகாபுரி ஆகிய இடங்களில் 13 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் ஆதிதிராவிட மக்களுக்காக கட்டப்பட்டுள்ள 11 சமுதாய நலக்கூடங்கள், திருவள்ளூர் மாவட்டம் - செஞ்சியம்மன் நகர், திருப்பாலைவனம், கிருஷ்ணகிரி மாவட்டம் - சந்திரபட்டி, கே.கொத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் - மேல்கச்சிராபட்டு, தண்டரம்பட்டு, தனிபாடி, மேல்பசர், இராணிப்பேட்டை மாவட்டம் - அகவலம் ஆகிய இடங்களில் 4 கோடியே 65 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் பழங்குடியின மக்களுக்காக கட்டப்பட்டுள்ள 8 சமுதாய நலக்கூடங்கள், என மொத்தம் 17 கோடியே 74 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 19 சமுதாய நலக்கூடங்கள்;

சென்னை மாவட்டம் - வேப்பேரி, சைதாப்பேட்டை, இராயபுரம், வேலூர் மாவட்டம் - வேலூர், திருண்ணாமலை மாவட்டம் - செய்யாறு, திருவண்ணாமலை, கடலூர் மாவட்டம் - சிதம்பரம், தருமபுரி மாவட்டம் - தருமபுரி, கரூர் மாவட்டம் - தான்தோன்றிமலை, தஞ்சாவூர் மாவட்டம் - தஞ்சாவூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை, மதுரை மாவட்டம் - சொக்கிகுளம், சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் - இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டை, காந்திநகர், தூத்துக்குடி மாவட்டம் - தூத்துக்குடி, தென்காசி மாவட்டம் - குற்றாலம், விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கான கல்லூரி விடுதிகளில் 9 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 20 கற்றல் கற்பித்தல் கூடம், சென்னை மாவட்டம் - நாகல் கேணி, நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கான கல்லூரி விடுதிகளில் 87 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 கற்றல் கற்பித்தல் கூடம், என மொத்தம் 10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 22 கற்றல் கற்பித்தல் கூடங்கள்;

தமிழ்நாட்டின் 22 மாவட்டங்களில் 52 கோடியே 58 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1000 பழங்குடியினர் மக்களுக்கான குடியிருப்புகள்;

என மொத்தம் 227 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் 1105 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

**பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் குறித்த விவரங்கள்**

**ஆதிதிராவிடர் நல ஆணையரகத்தின் சார்பில்** வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்திற்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்; அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்தில் 60 நபர்களுக்கு 21 கோடி ரூபாய் உதவித்தொகை; உயர் கல்வியில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேல் மதிப் பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர் புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங் களில் தங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் உயர் திறன் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தில் 100 மாணவ, மாணவியர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை; முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தில் 100 மாணவ, மாணவியர்களுக்கு 1 கோடி ரூபாய் ஊக்கத்தொகை; உயர்நீதி மன்றத்தில் சட்ட உட்பயிற்சி மாணாக்கருக்கான உதவி வழங்கும் திட்டத்தில் 30 மாணவ, மாணவியர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் உதவித்தொகை;

**பழங்குடியினர் நல இயக்குநரகத்தின் சார்பில்** தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் 10 சதவிகித நிதி மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய பழங்குடியினர் தொல்குடி வாழ்வாதரா திட்டத்தின் கீழ் 140 பயனாளிகளுக்கு 4 கோடி ரூபாய் மதிப்பிலான திறன் பயிற்சி; தொல்குடி ஐந்திணை வேளாண்மை மேலாண்மை திட்டத்தில், திருச்சிராப்பள்ளி, சேலம், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், தருமபுரி, ஈரோடு, மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் சங்கங்களைச் சேர்ந்த 2500 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள்; தொல்குடி ஐந்திணை வேளாண்மை மேலாண்மை மதிப்புக்கூட்டு திட்டத்தில் சிறுதானிய உற்பத்தி பெருக்குதல் மற்றும் மதிப்புக்கூட்டல் தொழிற்சாலை உருவாக்குதல், மீன் பண்ணை, நண்டு வளர்ப்பு மற்றும் வண்ண மீன்கள் வளர்ப்பு போன்ற மதிப்புக்கூட்டு மையங்கள் அமைத்திட 100 பயனாளிகளுக்கு 15 கோடி ரூபாய் மதிப்பிலான மானியம்;

**ரூ. 6.55 கோடி ரூபாய் செலவில் நீண்ட தூர கம்பியில்லா இணைப்பு திட்டம்**

**தொலைபேசி வழி மருத்துவம் மற்றும் தொலைபேசி வழி கல்வி மையங்கள்**

திருப்பத்தூரில் 17 அங்கன்வாடிகள் மற்றும் 28 தொடக்க பள்ளிகளில் 45 மையங்களும், ஈரோட்டில் தொடக்க பள்ளிகளில் 33 மையங்களும், என மொத்தம் 78 இடங்களில் தொலைபேசி வழி மருத்துவம் மற்றும் தொலைபேசி வழி கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**இ-சேவை மையங்கள்**

இத்திட்டத்தின் மூலம் திருப்பத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 10 இ-சேவை மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, தற்போது திருப்பத்தூர் வட்டாரம், புதூர் நாடு பஞ்சாயத்து கீழூரில் ஒரு இசேவை மையம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நீண்ட தூர கம்பியில்லா இணைப்பு திட்டத்தின் மூலம் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டாரம் மற்றும் ஈரோடு மாவட்டம், அந்தியூர், தாளவாடி சத்தியமங்கலம் வட்டாரங்களில் வசிக்கும் சுமார் 25,000 பழங்குடியின மக்கள் பயன்பெறுவர்.

தாட்கோ சார்பில் சிறு வணிகக் கடன் திட்டத்தின் கீழ் 2886 பயனாளிகளுக்கு 22 கோடியே 90 இலட்சம் ரூபாய் கடனுதவி; விவசாய தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிரை நில உரிமையாளராக அதிகாரம் அளிக்கும் வகையில் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கு 25 இலட்சம் ரூபாய் கடனுதவிக்கான மானியம்; முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தில் 100 பயனாளிகளுக்கு 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் கடனுதவிக்கான மானியம்; பொலிவுவிடுதி மாணாக்கருக்கான உடல் நலம் பேணும் பெட்டகம் வழங்கும் திட்டத்தில் 17,000 பயனாளிகளுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பெட்டகம்; அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 350 பயனாளிகளுக்கு 25 கோடி ரூபாய் கடனுதவிக்கான மானியம்;

என மொத்தம் 48,436 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 104 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் இன்றையதினம் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் மொத்தம் 49,542 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 332 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கட்டடங்களை திறந்து வைத்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பித்துள்ளார்.

முன்னதாக, சமத்துவ நாள் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழாக்கம் செய்யப்பட்ட அண்ணல் அம்பேத்கர் படைப்புகளான சாதியை அழித்து ஒழித்தல் (Annihilation of Caste), இந்து மதத்தின் புதிர்கள் (Riddles in Hinduism) ஆகிய நூல்களை வெளியிட, பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மேலும், வன உரிமைச் சட்டத்திற்கான வரைபடத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளான சமத்துவ நாளையொட்டி அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் இதே போன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, பிரகாஷ் அம்பேத்கர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமிபிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.